2017 ஜூன் 29]

சதவிகித மாணவர்களுக்கு மட்டும்தான் அது சரியாக இருக்கிறது. எனவே, அதை ஆய்வு செய்து, பழனி கல்லூரியிலே கூடுதலாக மாணவர்களைச் சேர்ப்பதற்கான வாய்ப்பிருப்பின், அதை அரசு பரிசீலனை செய்து, உரிய நடவடிக்கையை எடுக்கும். இன்றைக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுதான் தொடர்ந்து ஆட்சிசெய்து கொண்டிருக்கிறது. எதிர்காலங்களில் இதுபோன்ற தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற வகையிலேதான்—நான் முன்பே சுட்டிக்காட்டியதைப்போல, மேலும் 268 புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்குவதற்குண்டான வாய்ப்பை, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடி பழனிசாமி அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அதையும் இன்றைக்கு முறையாகப் பயன்படுத்தி, அந்தப் பகுதியிலே இருக்கின்ற மாணவர்களுடைய தேவைகள் பூர்த்தி செய்யப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 104, மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

104—

முந்திரித் தொழிற்சாலை

***1234—திரு. பா. ஆறுமுகம்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கந்தர்வகோட்டை தொகுதியில் முந்திரித் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத், தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) முந்திரி உடைக்கும் வசதிகொண்ட புதிய தொழில்நுட்பத்துடன்கூடிய தொழிற்சாலையை அமைக்கும் திட்டம் அரசின் வசம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2017 ஜூன் 29

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.

திரு. பா. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருபுறம் காவேரி, மறுபுறம் கொள்ளிடம், இடையில் தீவான திருவரங்கத்தில் உதித்திட்ட எங்கள் குல விளக்கு அம்மா! ஏழைகளின் ஒளி விளக்கு அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, தங்கத் தாரகை இருக்கும் திசை நோக்கி வணங்கி, எனது கந்தர்வகோட்டை தொகுதியின் சார்பாக கீழ்க்காணும் கோரிக்கையைச் சமர்ப்பிக்கின்றேன்.

வானம் பார்த்த பூமியாகிய கந்தர்வகோட்டையில் வறட்சியைத் தாங்கி வளரும் முந்திரிப் பயிர்கள் ஆயிரக்கணக்கான ஏக்கர் அளவில் உள்ளன. இதை ஆதாரமாகக் கொண்டு, மாண்புமிகு அம்மாவின் அரசு முந்திரித் தொழிற்சாலையை அமைத்துத் தந்தால், என் தொகுதியில் உள்ள ஆயிரக்கணக்கான ஏழையெளிய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக்கொள்ள உதவியாக இருக்கும். எனவே, தயவுசெய்து கந்தர்வகோட்டையில் முந்திரித் தொழிற்சாலையை மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு அமைத்துத் தருமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டு அமைகிறேன்.

முற்பகல் 10—30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டத்தில் 6,103 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி சாகுபடி செய்யப்படுகிறது. தமிழ்நாடு அரசின் வேளாண்மைத் துறை, மத்திய அரசின் Agricultural and Processed Food Products Export Development Authority உடன் இணைந்து 12—4—2005 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. அதனடிப்படையில், தகுந்த தொழில்முனைவோர் போதிய நிதி ஆதாரத்தோடு செயற்குறிப்புடன் தொழில் துவங்க முன்வந்தால், TIDCO நிறுவனம் ஆராய்ந்து, முயற்சி மேற்கொண்டு முந்திரித் தொழிற்சாலை அமைப்பதற்குரிய நடவடிக்கையை மேற்கொண்டு, புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வகோட்டை பகுதியில் முந்திரித்

2017 ஜூன் 29]

தொழிற்சாலை அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பா. ஆறுமுகம் அவர்கள்.*

திரு. பா. ஆறுமுகம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது தொகுதி மக்களின் சார்பாக என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கா. கதிர்காமு அவர்கள்.*

டாக்டர் கா. கதிர்காமு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பெரியகுளம் தொகுதியில் மாம்பழ விளைச்சல் அதிகமாக இருக்கின்றது. பெரியகுளத்திலிருந்து இந்தியா முழுவதும் மட்டுமல்லாமல், வெளிநாடுகளுக்கும் அதிகளவில் மாம்பழங்கள் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. பெரியகுளம் பகுதியில் ஒரு மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்துத் தர வேண்டும் என்று அப்பகுதி மக்கள் நீண்டநாட்களாக கோரிக்கை வைத்துள்ளார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி புரிந்துவரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களும், அப்பகுதி மக்களின் நீண்டநாள் கோரிக்கையினை ஏற்று, பெரியகுளம் பகுதியில் ஒரு மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்துத் தர வேண்டுமென்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள், "பெரியகுளம் பகுதியில் மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலையை அமைத்துத் தர வேண்டும்" என்று கேட்டிருக்கிறார். தகுந்த தொழில்முனைவோர்கள் போதிய நிதியாதாரத்துடன் முன்வந்தால், சாத்தியக்கூறுகள் ஆராயப்பட்டு, திட்டம் தயாரிக்கப்பட்டு, தொழிற்சாலை ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.*

மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை என்பது Small Scale Industries–ன்கீழ் வரும் தொழிற்சாலையாகும். எனவே, குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்களுடன் கலந்தாலோசனை செய்து, மாம்பழக் கூழ் தயாரிக்கும் தொழிற்சாலை நிச்சயமாக அமைத்துத் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. கணேசன் அவர்கள்.

திரு. வெ. கணேசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே கடலூர் மாவட்டம், பண்ருட்டி பகுதியில்தான் அதிகமான அளவு முந்திரி உற்பத்தி செய்யப்படுகிறது; விளைவிக்கப்படுகிறது. அங்கு சிறு, சிறு தொழிற்சாலைகள் செயல்படுகின்றன. எனினும், வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படக்கூடிய அளவிற்கு அதிகமாக முந்திரி உற்பத்தி செய்யப்படுகின்ற காரணத்தினால், அங்கே அரசு மூலமாக ஒரு முந்திரித் தொழிற்சாலையை அமைத்தால், படித்த பெண்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு அதிகமான வேலைவாய்ப்புகளை உருவாக்க முடியும். எனவே, அதிகமான அளவு முந்திரி உற்பத்தி செய்யப்படுகின்ற பண்ருட்டி பகுதியில், ஒரு முந்திரித் தொழிற்சாலையை அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எம்.சி. சம்பத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில், கிட்டத்தட்ட 29,641 ஹெக்டேர் பரப்பளவில் முந்திரி சாகுபடி செய்யப்படுகிறது. குறிப்பாக, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி ஆகிய பகுதிகளை உள்ளடக்கி முந்திரி சாகுபடி செய்யப்படுகிறது. அந்த அடிப்படையில், நான் ஏற்கெனவே குறிப்பிட்டதுபோல, மத்திய அரசின் Agricultural and Processed Food Products Export Development Authority உடன் இணைந்து கையெழுத்தான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கடலூர் மாவட்டமும் உள்ளடங்கியுள்ளது. ஏற்கனெவே கையெழுத்தான புரிந்துணர்வு

ஒப்பந்தம் கடலூர், தஞ்சாவூர், புதுக்கோட்டை, சிவகங்கை, அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கியே உள்ளது. அந்த அடிப்படையில், காட்டாண்டிகுப்பம் பகுதியில் Sattva Agro Expo Private Limited *என்ற கம்பெனி ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றது. அந்தத் தொழில் நிறுவனம், கிட்டத்தட்ட 37 பணியாளர்களைக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டது. தற்போது, அந்நிறுவனத்தில் 300 பேர் வேலை செய்கிறார்கள். கிட்டத்தட்ட 280 பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கின்ற ஒரு நிறுவனமாக, அது செயல்பட்டு வருகின்றது. அந்நிறுவனத்தில் 7,940 சதுர அடியில்* processing unit *இருக்கிறது; 20,500 சதுர அடியில்* packaging unit *இருக்கிறது. அந்த அடிப்படையில், அந்த நிறுவனம் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 10—35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 105, மாண்புமிகு உறுப்பினர் திரு. த. மனோ தங்கராஜ், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

105—

மருத்துவமனையைத் தரம் உயர்த்துதல்

***1299—திரு. த. மனோ தங்கராஜ்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், குலசேகரம் அரசு மருத்துவமனையை வட்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*